# ஏப்ரல்- 22 - ஞாயிறு

## "நல்ல ஆயன் நானே"(யோ 10:11)

## முதல் வாசகம் : திருத்தூதர் பணி4 : 8 – 12

அப்பொழுது பேதுரு தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு அவர்களுக்கு மறுமொழியாகக் கூறியது "மக்கள் தலைவர்களே, மூப்பர்களே,உடல் நலமற்றியிருந்த இவருக்கு நாங்கள் செய்த நற்செயல் எப்படி நிகழ்ந்தது என்பதைக் குறித்து நாங்கள் இன்று விசாரணை செய்யப்படுகிறோம்.நாசரேத்து இயேசுவின் பெயரால் இவர் நலமடைந்து நம்முடன் நிற்கிறார். இது உங்கள் எல்லாருக்கும், இஸ்ரயேல் மக்கள் அனைவருக்கும் தெரிந்திருக்கட்டும். நீங்கள் இயேசுவைச் சிலுவையில் அறைந்தீர்கள். ஆனால் கடவுள் இறந்த அவரை உயிருடன் எழுப்பினார்.இந்த இயேசுவே, "கட்டுகிறவர்களாகிய உங்களால் இகழ்ந்து தள்ளப்பட்ட கல். ஆனாலும் முதன்மையான மூலைககல்லாக விளங்குகிறார்."இவராலேயன்றி வேறு எவராலும் மீட்பு இல்லை. ஏனென்றால் நாம் மீட்புப் பெறுமாறு வானத்தின்கீழ், மனிதரிடையே இவரது பெயரன்றி வேறு எந்தப் பெயரும் கொடுக்கப்படவில்லை.

**பதில்பாடல் :** கட்டுவோர் புறக்கணித்த கல்லே கட்டடத்துக்குமூலைக்கல் ஆயிற்று.

## இரண்டாம் வாசகம் : 1 யோவான் 3 : 1 – 2

என் அன்பார்ந்தவர்களே, நம் தந்தை நம்மிடம் எத்துணை அன்பு கொண்டுள்ளார் என்று பாருங்கள். நாம் கடவுளின் மக்களென அழைக்கப்படுகிறோம் கடவுளின் மக்களாகவே இருக்கிறோம். உலகம் அவரை அறிந்துகொள்ளாததால்தான் நம்மையும் அறிந்து கொள்ளவில்லை. என் அன்பார்ந்தவர்களே, இப்போது நாம் கடவுளின் பிள்ளைகளாய் இருக்கிறோம். இனி எத்தன்மையராய் இருப்போம் என்பது இன்னும் வெளிப்படவில்லை. ஆனால் அவர் தோன்றும்போது நாமும் அவரைப் போல் இருப்போம் ஏனெனில் அவர் இருப்பதுபோல் அவரைக் காண்போம்.

## நற்செய்தி : யோவான்10 : 11 – 18

அக்காலத்தில் இயேசு கூறியது:"நல்ல ஆயன் நானே. நல்ல ஆயர் ஆடுகளுக்காகத் தம் உயிரைக் கொடுப்பார்.கூலிக்கு மேய்ப்பவர் ஓநாய் வருவதைக் கண்டு ஆடுகளை விட்டு விட்டு ஓடிப்போவார். ஏனெனில் அவர் ஆயரும் அல்ல் ஆடுகள் அவருக்குச் சொந்தமும் அல்ல் ஓநாய் ஆடுகளைப் பற்றி இழுத்துக்கொண்டு போய் மந்தையைச் சிதறடிக்கும்.கூலிக்கு மேய்ப்பவருக்கு ஆடுகளைப்பற்றி கவலை இல்லை.நல்ல ஆயன் நானே. தந்தை என்னை அறிந்திருக்கிறார் நானும் தந்தையை அறிந்திருக்கிறேன்.அதுபோல நானும் என் ஆடுகளை அறிந்திருக்கிறேன் என் ஆடுகளும் என்னை அறிந்திருக்கின்றன. அவைகளுக்காக எனது உயிரைக் கொடுக்கிறேன்.இக்கொட்டிலைச் சேரா வேறு ஆடுகளும் எனக்கு உள்ளன. நான் அவற்றையும் நடத்திச் செல்லவேண்டும். அவையும் எனது குரலுக்குச் செவி சாய்க்கும். அப்போது ஒரே மந்தையும் ஒரே ஆயரும் என்னும் நிலை ஏற்படும்.தந்தை என்மீது அன்பு செலுத்துகிறார். ஏனெனில் நான் என் உயிரைக் கொடுக்கிறேன் அதை மீண்டும் பெற்றுக்கொள்ளவே கொடுக்கிறேன்.என் உயிரை என்னிடமிருந்து யாரும் பறித்துக் கொள்வதில்லை. நானாகவே அதைக் கொடுக்கிறேன். உயிரைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு அதை மீண்டும் பெற்றுக் கொள்ளவும் அதிகாரம் உண்டு. என் தந்தையின் கட்டளைப்படியே நான் இப்படிச் செய்கிறேன்."என்றார்.

**தியானம்:** யேசு பல வேளைகளில் ஆடுகளையும் அவற்றை மேய்க்கும் ஆயனைப் பற்றியும் கூறி இருக்கின்றார். அன்றைய காலத்தில் அதிகமானவர்கள் ஆட்டுப் பண்ணை வைத்திருந்தார்கள். எனவே அதனை உவமையாக சொல்லும்போது மக்களால் எளிதாக புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. எம்மால் அதனை கற்பனையில்தான் பார்க்க முடிகிறது. இப்போது ஆட்டிற்கு பதிலாக நாம் வீட்டில் வளர்க்கும் செல்லப் பிராணிகளை குறிப்பாக நாய்களை நினைப்போம். சிலருக்கு நாய்கள் என்று சொன்னாலே பிடிக்காது. சிலா் அவற்றை தமது குடும்பத்தில் ஒருவராக, பிள்ளையைப்போல நேசிப்பார்கள். சில பிள்ளைகள் தம்மை விட பெற்றோர் அவற்றை அதிகம் அன்பு செய்வதாக, அக்கறை கொள்வதாக குற்றம் சொல்வார்கள். இப்படித்தான் ஆயனின் செயற்பாடும் இருக்கும், தனக்கு சொந்தமான ஆட்டிற்கு ஏதாவது நேர்ந்தால் தனது உயிரைக் கூட பொருட்படுத்தாமல் காப்பாற்றுவான். இவ்வாறே இறைவன் நம்மை அன்பு செய்கிறார். எல்லா தீமையில் இருந்தும் எம்மை பாதுகாத்து வழி நடத்துவார் என்பதனை இன்றைய நற்செய்தியும், 2ம் வாசகமும் எமக்கு வெளிப்படுத்துகின்றன. இதனை உணராமல் நாம் வாழ்ந்து வருகின்றோம். சீடர்கள் தாம் யேசுவுடன் வாழ்ந்த காலத்தில் கற்றவற்றை, அறிந்தவற்றை அவர் இவ்வுலகை விட்டு சென்ற பின்பு பறை சாற்றினார்கள். முதல் வாசகத்தில் பார்ப்பதுபோல் செய்த நல்ல காரியத்திற்காக விசாரிக்கப் பட்டார்கள். சீடர்கள் யேசுவுடன் வாழ்ந்தார்கள், அவர் செய்தவற்றை பார்த்தார்கள், பேசியவற்றை கேட்டார்கள், அதனை மக்களுக்கு பறை சாற்றி இறை அரசை பரப்பினார்கள். ஆனால் இன்றும் பலர் இப்பணியை தமது உயிரைக்கூட பணயம் வைத்து செய்து வருகிறார்கள். குறிப்பாக முஸ்லிம் நாடுகளில் வாழ்கின்ற கிறிஸ்த்தவர்களிற்கு மரண அச்சுறுத்தல் இருக்கின்றது. அப்படி இருந்தும் அவர்கள் ஏன் அதனை பின்பற்றுகிறார்கள். அவர்கள் கடவுளை அனுபவித்திருக்கிறார்கள். தம்முடன் கூட இருக்கின்றார் என்பதனை உணர்கிறார்கள். அதனால் தமது விசுவாச வாழ்வில் உறுதியாக நிற்கிறார்கள். ஆனால் நாம் கடமைக்காக எல்லவற்றையும் செய்கிறோம். மற்றவர்கள் புகழ வேண்டும் என்று ஆசைப் படுகின்றோம், இது பணியா? இதனையா இறைவன் விரும்புகிறார்? எனவே மற்றவர்களிடம் கடவுளைக் காண்போம். அவர்களின் தேவை அறிந்து உதவுவோம், இறை அரசை கட்டிக் காப்போம்.